செய்தி வெளியீடு எண் : 1222 நாள் : 16.08.2024

**செய்தி வெளியீடு**

சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் இன்று (16.08.2024) தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட கல்வி நிறுவன தலைவர்களுடனான மாநில அளவிலான கருத்தரங்கத்தை மாண்புமிகு இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்து இத்திட்டம் சிறப்பாக செயல்படுவதற்கு தேவையான பல ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் வழங்கினார். மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி அவர்கள் இக்கருத்தரங்கத்திற்கு முன்னிலை வகித்தார்.

இத்திட்டத்தின் துவக்கம் மற்றும் வெற்றிகரமான செயல்பாடு குறித்து மாண்புமிகு இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கூறுகையில் தேசிய அளவில் நான் முதல்வன் திட்டத்தின் மூலம் உயர்கல்வியில் தமிழ்நாடு அரசு புகுத்தியுள்ள புதுமையான திட்டங்கள் நாட்டில் திறன் மேம்பாட்டுத் திட்டங்களில் முன்னுதாரணமாக திகழ்கின்றன.

கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் தமிழ்நாடு மாபெரும் சாதனைகளைப் படைத்து வருகிறது. தொடக்கக் கல்வியில் தொடங்கி – உயர்கல்வி வரையிலும், காலை சிற்றுண்டித் திட்டம் – புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன் மாதிரியான திட்டங்கள் நம் மாணவர்களின் கல்விக்கு துணை நின்று வருகின்றன. புதுமைப்பெண் திட்டம் வந்த பிறகு கல்லூரியில் மாணவிகளின் சேர்க்கை 34 சதவீதம் அதிகரித்துள்ளது. ஒட்டுமொத்த உயர்கல்வி சேர்க்கை விகிதத்தில் (Gross Enrollment Ratio) தமிழகம் முன்னிலை வகிக்கிறது. GER ஐ பொறுத்தவரை ஒட்டுமொத்த இந்திய நாடும் 50 சதவீதத்தை தாண்டுவதற்கு முயற்சி எடுத்துக் கொண்டு இருக்கும் போது GERல் 100 சதவீதத்தை எட்டுவதற்கான முயற்சிகளை தமிழ்நாடு அரசு செயல்படுத்திக் கொண்டு வருகிறது. தேசிய உயர்கல்வி தரவரிசைப் பட்டியலில் தமிழகத்தைச் சேர்ந்த நிறுவனங்கள் அதிக அளவில் இடம்பிடித்துள்ளது. குறிப்பாக அண்ணா பல்கலைக்கழகம் நம் நாட்டில் உள்ள தலைசிறந்த கல்வி நிறுவனமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது. நான் முதல்வன் திட்டம் எண்ணற்ற சாதனைகளைப் படைத்து வருகின்றது. முதலமைச்சரின் கனவுத்திட்டம் மட்டும் அல்ல இலட்சக் கணக்கான இளைஞர்களின் கனவை நிறைவேற்றும் திட்டமாக உயர்ந்து நிற்கிறது. இத்திட்டத்தில் இதுவரை 31 இலட்சம் மாணவர்கள் பயிற்சி பெற்று உள்ளார்கள் என்றும், நான் முதல்வன் வேலைவாய்ப்பு முகாம்களின் மூலம் ஒரு இலட்சம் மாணவர்கள் வேலைவாய்ப்பைப் பெற்றுளனர் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார். நான் முதல்வன் திட்டம் எந்தத்திசையில் சென்று கொண்டிருக்கிறது இனி எந்தத் திசையில் சென்றால் இன்னும் அதிகமான

வெற்றிகளை குவிக்க முடியும் என்பதற்கான வழிமுறைகளை உருவாக்குவதே இந்தக் கருத்தரங்கம் நடைபெறுவதன் நோக்கம். வளாக வேலைவாய்ப்பில் கல்லூரிகளை நாடி வருவதற்கு இரண்டு அம்சங்கள் முக்கியமானவை. திறன்மிக்க மாணவர்கள் இருக்க வேண்டும். இதற்காகத்தான் நான் முதல்வன் திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் உருவாக்கினார்கள். Skill Lab, Skill Based syllabus coaching, College Ranking போன்ற தரவரிசையில் கல்லூரிகள் முன்னிலை வகிப்பதும் முக்கியம். நான்முதல்வன் திட்டத்தில் வழங்கபடும் திறன் பயிற்சி ஒரு கூட்டு முயற்சி என்பதும் மாணவர்கள், கல்லூரிகள், பேராசிரியர்கள் அனைவரும் இதற்கு ஒத்துழைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். எனவே, நான் முதல்வன் எடுக்கும் அனைத்து முன்னெடுப்புகளிலும் கல்லூரிகள் பங்குபெற்று இத்திட்டத்தினை வெற்றிபெறச் செய்யவேண்டும் என்றும் கேட்டுக் கொள்வதாகத் தெரிவித்தார். இக்கருத்தரங்கத்தில் பகிரப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் இன்னும் இலட்சக்கணக்கான இளைஞர்கள் திறன் பெறுவதற்கு இத்திட்டத்தை மேலும் செழுமைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்றும் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

மேலும், இக்கருத்தரங்கத்தில் கலந்து கொண்ட மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் கல்லூரி நிர்வாகிகளுக்கு நான் முதல்வன் திட்டம் சிறப்பாக செயல்பட ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்கினார். உயர்கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை மட்டுமல்லாது வழங்கப்படும் கல்வித் தரத்திலும் தமிழ்நாடு முன்னிலை வகிப்பதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நான் முதல்வன் திட்டத்தினை தமிழ்நாட்டிற்கு அர்பணித்துள்ளார் என்று கூறினார். மேலும், இக்கருத்தரங்கத்தில் உரையாற்றிய உயர்கல்வித்துறை செயலர் நான் முதல்வன் திட்டம் வேலைவாய்ப்பு பெறுவதற்கான சவால்களுக்கு தீர்வாக அமைந்துள்ளது என்றும் கல்லூரி நிர்வாகங்கள் இத்திட்டத்தின் நோக்கத்தினை புரிந்து கொண்டு முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் எடுத்துரைத்தார்.

சென்னை மண்டலத்தில் உள்ள அனைத்து கல்லூரிகளின் தலைமை நிர்வாகிகள் (தலைவர் / செயலாளர், முதல்வர்கள் மற்றும் SPOC–கள்) அனைவரும் இக்கருத்தரங்கத்தில் கலந்து கொண்டனர். இந்த கருத்தரங்கத்தில் நான் முதல்வன் திட்டம், அதன் நோக்கங்கள் மற்றும் எதிர்கால இலக்குகள் குறித்த முழுமையான விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்த சந்திப்பில், அண்ணா பல்கலைக்கழகத்தின் 7 மண்டலங்களில் இருந்து 135 பொறியியல் கல்லூரிகளும், சென்னை மற்றும் திருவள்ளுவர் பல்கலைக்கழகங்களில் இருந்து 230 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் பங்கேற்றன.

மேலும், இக்கூட்டத்தில் சிறப்பாக செயல்புரிந்த கல்லூரிகளுக்கு இரண்டு வகையான விருதுகள் வழங்கப்பட்டன.

1. மாணவர்களுக்கு அதிகளவு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த கல்லூரிகள்
2. இத்திட்டத்திற்கு முழுமையான ஒத்துழைப்பை சிறந்த முறையில் நல்கும் கல்லூரிகளின் முகவர்கள் (SPOC)

இக்கூட்டத்தில் உயர்கல்வித்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலர் திரு பிரதீப் யாதவ் இ.ஆ.ப., சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அரசு செயலாளர் டாக்டர்.டாரேஸ் அகமது இ.ஆ.ப., , தொழில் நுட்ப கல்வி இயக்கக ஆணையர் திரு. டி. ஆபிரகாம் இ.ஆ.ப, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி. J.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப, கல்லூரிக் கல்வி இயக்குநர் செ. கார்மேகம், இ.ஆ.ப அண்ணா பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக் கழகம், மற்றும் திருவள்ளுவர் பல்கலைக்கழக உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டு இவ்விழாவினை சிறப்பித்தனர்.

……………………

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu